## சிறப்புக்குறிப்பு 5

## 2020ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கைக் கருவிகள்

பொருளாதாரங்கள் மற்றும் நிதிச் சந்தைகள் மீதான கொவிட்- 19 இன் முன்னெப்பொழுதுமில்லாத தாக்கமானது, நோய்த்தொற்றினால் உருவாகிய நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும் அவற்றின் பொருளாதாரங்களிற்கு ஆதரவளிப்பதற்குமாக அசாதாரண வழிமுறைகளை மேற்கொள்வதற்கு உலகிலுள்ள மத்திய வங்கிகளைத் தூண்டியது. பாரம்பரிய நாணயக் கொள்கைக் கருவிகளுக்கு மேலதிகமாக, பல மத்திய வங்கிகள் கணியம்சார் தளர்த்தல், இலக்கிடப்பட்ட கொடுகடன் திட்டங்கள், குறைந்த வட்டி வீதங்களைப் பேணுவதற்கான முன்னோக்கிய வழிகாட்டல் போன்றவை அடங்களாக பாரம்பரியமற்ற நாணயக் கொள்கைகளைப் பயன்படுத்தின.

கொவிட்-19 நோய்த்தொற்றின் நோய்ப்பரவலைத் தொடர்ந்து நாணயக் கொள்கையை தளர்த்திய உலகின் முதல் மத்திய வங்கிகளின் ஒன்றாக இலங்கை மத்திய வங்கியும் 2020ஆம் ஆண்டில் நாணயக்கொள்கைக் கொள்கைக் கருவிகளின் அணிவரிசையை விரிவுபடுத்தியது. சந்தையில் போதியளவு திரவத்தன்மையை உட்செலுத்துதல் மற்றும் கடன்பாட்டு செலவுகளைக் குறைத்தல் மூலம் நிதிச்சந்தைகளுக்கு ஆதரவளிப்பதுடன் பொருளாதார நடவடிக்கையினை மீட்பதனையும் இலக்காகக் கொண்டு பாரம்பரியமற்ற வழிமுறைகள் உள்ளடங்களாக இந்தக் கொள்கைகள் அசாதாரணமான வேகம், அளவு மற்றும் செயற்பரப்புகளில் நிறைவேற்றப்பட்டன. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதி தூண்டுதல்களாலும், மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பல ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளினாலும் இணை சேர்க்கப்பட்டது. இவ்வகையிலான பரந்த நாணயக் கொள்கைத் தூண்டலை மேற்கொள்வதற்குத் தேவையான கொள்கை வெளியை மிதமான கேள்வி மற்றும் பணவீக்க நிலைமைகள் வழங்கின.

வரைபடம் சி.கு. 5.1

மத்திய வங்கியால் 2020 இல் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கைக் கருவிகளும் அதன் தாக்கமும்



பொருளாதார நடவடிக்கைகளில் விரைவான மீட்சியை உறுதிசெய்வதன் அவசியத்தையும், நீண்ட கால மிதமான வளர்ச்சியின் பின்னர் உயர் வளர்ச்சிப் பாதைக்கு திரும்புவதையும், மற்றும் பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதையும் கருத்தில் கொண்டு, உண்மையான வட்டி வீதங்களைக் குறைப்பதன் மூலம் கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்கும் நோக்கில், 2020 காலப்பகுதியில் மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை 2.50 சதவீத புள்ளிகளால் கணிசமாக குறைத்தது. இது பொருளாதாரத்தில் உள்நாட்டு முதலீடு, உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்றது. மேலும், மத்திய வங்கி, தாங்கிக்கொள்ளக்கூடிய செலவுகளில் நிதியியல் துறைக்கு அவசரகால நிதியளித்தல் கிடைக்கப்பெறுவதனை சமிக்ஞைப்படுத்தும் பொருட்டு வங்கி வீதத்தை 6.50 சதவீதப் புள்ளிகளால் குறைத்தது.

உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் காசுப்பாய்ச்சலுக்கான இடையூறுகள் காரணமாக நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிதி நிறுவனங்கள், தொழில்கள் மற்றும் தனிநபர்களுக்கு உதவும் வகையிலும் மத்திய வங்கி நியதி ஒதுக்கு விகிதத்தினை மொத்தமாக 3 சதவீத புள்ளிகளினால் குறைத்தமையினால் 2020 ஆம் ஆண்டில் சந்தைக்கு ஏறத்தாழ ரூ.180 பில்லியன் நேரடியாக உட்செலுத்தப்பட்டது.

மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பணச் சந்தையில் போதிய திரவத்தன்மையினைப் பேணும் வேளையில், குறுகிய கால வட்டி வீதங்களை குறைந்த மட்டங்களில் தொடர்ந்துமிருப்பதற்கு வழிகாட்டியது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் மொத்தமாக ஏறத்தாழ ரூ. 625 பில்லியன் தொகையினை முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ததன் மூலம் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தொழில்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அரசாங்கத்துக்கு அவசர நிதி உதவிகளை மத்திய வங்கி வழங்கியது. இது உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் ஏறத்தாழ 2-3 சதவீத புள்ளிகளினால் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளைக் குறைப்பதற்கும் உதவியமையின் மூலம் அரசாங்கத்தின் கடன் பெறுகை தொடர்பான செலவுகளைக் கணிசமாகக் குறைத்தது.

உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கான தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நிதியளிப்பதற்கு சலுகையடிப்படையிலான கடன் திட்டங்களை (சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ்) மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. மத்திய வங்கி, இவ்வாறான திட்டங்களின் கீழ் 4 சதவீத சலுகை வட்டியில் ஏறத்தாழ ரூ. 180 பில்லியன் பெறுமதியிலமைந்த நிதியளித்தமை பெரும் சிக்கலான காலகட்டத்தில் தொழில்களுக்கு, குறிப்பாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நேரடி நிவாரணமாக அமைந்தது.

வங்கிகளுடனான தொடர்ச்சியான உரையாடலொன்றினை பேணியதனூடாக நாணயக் கொள்கை எதிர்பார்க்கைகளுக்கு இசைவாக சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதற்காக வர்த்தக வங்கிகளை இணங்கச் செய்வதற்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அத்தியாவசிய திரவத்தன்மை ஆதரவினை வழங்குவதற்கும் வங்கிகளை வலியுறுத்துவதற்கும் மத்திய வங்கி 2020 காலப்பகுதியில் ஒழுக்காற்றுக் கடப்பாடுகளைத் தொடர்ந்தும் பயன்படுத்தியது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் சந்தை வட்டிவீதங்களின் நிலைத்திருக்கக் கூடிய குறைப்பினை உறுதிப்படுத்துவதற்கும் 2019 தொடக்கம் வங்கித்தொழில் சமூகத்துடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளும் இந்த முயற்சியின் செயற்றிறனுக்கு ஆதரவளித்தன.

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமையானது ஒரு நீடித்த காலத்திற்குப் பேணப்பட முடியுமென பொருளாதார ஆர்வலர்களை சமரசப்படுத்தும் கருவியொன்றாக முன்னோக்கிய வழிகாட்டலினை மத்திய வங்கி பயன்படுத்தியது. அண்மைய எதிர்காலத்தில் வட்டி வீதங்களின் மீதான சாத்தியமான அதிகரிப்பு பற்றிய பாதகமான ஊகங்களை நீக்குவதில் இத்தகைய வழிகாட்டல் கருவியாயமைந்தது. மேலும், வீழ்ச்சியடைந்து வரும் சந்தை வட்டி வீதங்களின் உத்வேகத்தினைப் பேணிக்கொள்கின்ற வேளையில் நடுத்தரம் முதல் நீண்ட காலத்தில் ஒற்றை இலக்க வட்டி வீதக் கட்டமைப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளித்து அதன் மூலம் தக்கவைக்கப்பட்ட தாழ்ந்த பணவீக்கச் சூழலின் நன்மையினை உள்நாட்டு முதலீட்டார்களுக்குக் கடத்துவதில் இது துணைபுரிந்தது.

அதியுயர் வட்டி வீதங்களுடன் சில நிதியியல் சாதனங்களிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை விதிப்பதன் மூலம் மத்திய வங்கி இலக்கிட்ட வழிமுறைகளை மேற்கொண்டு அதன் மூலம் நாணயக்கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையினை மேம்படுத்தியது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளிற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீதான முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் வழங்கல் இலக்கிடலை அறிமுகப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில், 2020ஆம் ஆண்டு மத்திய வங்கியால் பயன்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைக் கருவித் தொடர்கள் மிகவும் சவாலான சூழ்நிலைகளில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் உறுதித்தன்மையை பேணுவதற்கும் நிதித்துறைக்கு வசதியளித்தன. இறைத் தூண்டல் வழிமுறைகளுடன் இத்தகைய அசாதாரணமான நாணயத் தளர்த்தல்களினால் ஆதரவளிக்கப்பட்டு பொருளாதாரம் நிலையான மீட்பின் சமிஞ்ஞையை ஏற்கனவே காண்பித்துள்ளது. உயர் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலுடன் பொருளாதாரம் உயர் வளர்ச்சிப்பாதையொன்றில் மீளெழுச்சியடைவதற்கு குறைந்த வட்டி வீதச் சூழலானது உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

7